**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 159/2019**

**Deposition of Witness for : PW 5**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | திருமதி. சாந்தி |
| **Father Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16-09-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது அய்யம்பாளையம் புதூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் என் மூத்தார். இறந்து போன தேவேந்திரன் என் மூத்தார். எங்கள் குடும்பத்தில் ஆளுக்கு 1 ஏக்கர் நிலம் உள்ளது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் காலை 9.30 மணியளவில் நான் என் நிலத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது எங்கள் வீட்டின் அருகே சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். சங்கரின் பசங்களும், தேவேந்திரனின் பசங்களும் அடித்துக் கொண்டு இருந்தார்கள். சங்கரும், தேவேந்திரனும் அடித்துக் கொண்டு இருந்தார்கள். சாட்சி பச்சையப்பன், பொன்னம்மாள், நான் மற்றும் குடும்பத்தினரும் சேர்ந்து எதிரியையும், தேவேந்திரனையும் விலக்கி விட்டோம். பசங்களை தடுத்துவிட்டு திரும்பி பார்த்த போது தேவேந்திரன் கீழே விழுந்து கிடந்தார். அடிக்கும் போது நான் பார்க்கவில்லை. விழுந்து கிடந்த போது தான் நான் பார்த்தேன். நாங்கள் உடனே தண்ணீர் கொடுத்து என் மூத்தார் ஏழுமலைக்கு தகவல் கொடுத்து தேவேந்திரனை ரோட்டிற்கு தூக்கிக் கொண்டு வந்தோம். என் மூத்தார் ஏழுமலை அவரை காரில் ஏற்றி கொண்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மருத்துவமனையில் தேவேந்திரன் இறந்து விட்டதாக தகவல் வந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- சாந்தி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 159/2019

## Deposition of Witness for : PW 6

| | |
|---|---|
| **Name** | **:** திரு. அண்ணாமலை |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16-09-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது அய்யம்பாளையம் புதூரில் வசித்து வருகிறேன். அ.சா.5 சாந்தி என் பக்கத்து நிலத்துக்காரா். இறந்து போன தேவேந்திரனை தெரியும். ஆஜா் எதிரியை தெரியும். சுமாா் 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 9.30 மணிக்கு நான் என் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்று பாா்க்கும் போது தேவேந்திரன் இறந்து விட்டாா். ஆஜா் எதிரி அங்கு தான் இருந்தாா். போலீசாா் என்னை விசாரணை செய்தாா்கள்.

**அரசு வழக்கறிஞா் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசாா் விசாரணையில் கடந்த 10.6.2018ந் தேதி காலை 9.30 மணிக்கு சங்கருக்கும், தேவேந்திரனும் பொது ஏா் கலப்பையை சங்கரின் மகன் மணிகண்டன் எடுத்தது சம்மந்தமாக தகராறு வந்தது என்றும், சங்கா் மகன் தேவேந்திரனின் தலையில் கொம்பால் அடித்தாா் என்றும், சங்கா் தேவிடியா பையா உன்னால் தான் அடிக்கடி சண்டை வருகிறது உன்னை ஒழித்தால் தான் நிம்மதி வரும் என்று கையில் இருந்த மரத்தடியால் இத்தோடு செத்து ஒழிடா என்று சொல்லி தேவேந்திரனின் பின் தலையில் அடித்தாா் என்றும், அதனால் தேவேந்திரன் மயங்கி கீழே விழுந்து விட்டாா் என்றும், ஏழுமலைக்கு தகவல் சொன்னதின் பேரில் அவா் தேவேந்திரனை காரில் ஏற்றிக் கொண்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றாா்கள் என்றும், அங்கு தேவேந்திரன் இறந்து விட்டாா்

என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி என் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

ஒம்/- அண்ணாமலை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 159/2019**

**Deposition of Witness for : PW 7**

**Name** **:** திரு. பலராமன்

**Father Name** **:**

**Village** **:**

**Taluk** **:**

**Caste** **:**

**Calling** **:**

**Religion** **:**

**Age** **:**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16-09-2022.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது அய்யம்பாளையம் புதூரில் வசித்து வருகிறேன். அ.சா.5 சாந்தி, அண்ணாமலையை தெரியும். இறந்து போன தேவேந்திரனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 9.30 மணிக்கு நான் என் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும் போது ஆஜர் எதிரி இறந்து போன தேவேந்திரனை அடித்து விட்டதாக கேள்வி பட்டேன். தேவேந்திரனுக்கு தண்ணீர் கொடுத்தார்கள். கார் மூலம் தேவேந்திரனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். தேவேந்திரன் இறந்து விட்டார் என்று கேள்வி பட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் கடந்த 10.6.2018ந் தேதி காலை 9.30 மணிக்கு தேவேந்திரன், சங்கரின் நிலத்திற்கு சென்று ஏன்டா என் ஏர் கலப்பை எடுத்தாய் என்று கேட்டதற்கு சங்கரின் மகன் பொது ஏர் கலப்பை அதனால் தான் எடுத்தேன் என்று கூறியதால் இருவருக்கும் தகராறு வந்தது என்றும், சங்கர் மகன் தேவேந்திரனின் தலையில் கொம்பால் அடித்தார் என்றும், சங்கர் தேவிடியா பையா உன்னால் தான் அடிக்கடி சண்டை வருகிறது உன்னை ஒழித்தால் தான் நிம்மதி வரும் என்று கையில் இருந்த மரத்தடியால் இத்தோடு செத்து ஒழிடா என்று சொல்லி தேவேந்திரனின் பின் தலையில் அடித்தார் என்றும், அதனால் தேவேந்திரன் மயங்கி கீழே விழுந்து விட்டார் என்றும், ஏழுமலைக்கு தகவல் சொன்னதின் பேரில் அவர் தேவேந்திரனை காரில் ஏற்றிக் கொண்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், அங்கு தேவேந்திரன் இறந்து விட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது

எதிரி என் பக்கத்து நிலத்துக்காரா் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

ஒம்/- பலராமன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 159/2019**

**Deposition of Witness for : PW 8**

**Name** : திரு. அன்பழகன்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16-09-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது அய்யம்பாளையம் புதூரில் வசித்து வருகிறேன். அ.சா.5 சாந்தி, அண்ணாமலை, பலராமனை தெரியும். இறந்து போன தேவேந்திரனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 9.30 மணிக்கு நான் என் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும் போது தேவேந்திரன் மயங்கி கீழே விழுந்து கிடந்தார். சம்பவ இடத்தில் ஆஜர் எதிரி குடும்பத்தாரும், தேவேந்திரன் குடும்பத்தாரும் இருந்தார்கள். மயக்கமடைந்த தேவேந்திரனை மருத்துவமனைக்கு தூக்கி சென்றார்கள். மருத்துவமனைக்கு கொண்டு சென்ற தேவேந்திரன் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் கடந்த 10.6.2018ந் தேதி காலை 9.30 மணிக்கு தேவேந்திரன், சங்கரின் நிலத்திற்கு சென்று ஏன்டா என் ஏர் கலப்பை எடுத்தாய் என்று கேட்டதற்கு சங்கரின் மகன் பொது ஏர் கலப்பை அதனால் தான் எடுத்தேன் என்று கூறியதால் இருவருக்கும் தகராறு வந்தது என்றும், சங்கர் மகன் தேவேந்திரனின் தலையில் கொம்பால் அடித்தார் என்றும், சங்கர் தேவிடியா பையா உன்னால் தான் அடிக்கடி சண்டை வருகிறது உன்னை ஒழித்தால் தான் நிம்மதி வரும் என்று கையில் இருந்த மரத்தடியால் இத்தோடு செத்து ஒழிடா என்று சொல்லி தேவேந்திரனின் பின் தலையில் அடித்தார் என்றும், அதனால் தேவேந்திரன் மயங்கி கீழே விழுந்து விட்டார் என்றும், ஏழுமலைக்கு தகவல் சொன்னதின் பேரில் அவர் தேவேந்திரனை காரில் ஏற்றிக் கொண்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், அங்கு

தேவேந்திரன் இறந்து விட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி என் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

ஒம்/- அன்பழகன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.